## சுருக்கம்

கலை பண்பாட்டுத் துறை – தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியம் – துணை இயக்குநர் நிலையில் உள்ள வாரிய செயலாளர் பணியிடம் திருச்சிராப்பள்ளிக்கும் மற்றும் திருச்சிராப்பள்ளியில் உள்ள மண்டல கலை பண்பாட்டு மைய உதவி இயக்குநர் பணியிடம் கலை பண்பாட்டு இயக்ககத்திற்கும் மாற்றம் செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

அரசாணை (நிலை) எண். 76 நாள்:30.05.2014

திருவள்ளுவர் ஆண்டு 2045, வைகாசி –16

**படிக்கவும் :–**

1) அரசாணை (நிலை) எண்.243, தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறை, நாள் 23.12.1991
2) அரசாணை (நிலை) எண்.115, தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறை, நாள் 6.5.1997
3) அரசாணை (நிலை) எண்.53, சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை, நாள் 28.2.2011
4) அரசாணை (டி) எண்.12, சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை, நாள் 1.2.2012

**மேலும் படிக்கவும்**

5) கலை பண்பாட்டுத் துறை ஆணையர்(பொ) அவர்களின் கடித ந.க.எண்.6782/ஆ1/2013, நாள் 24.2.2014
6) அரசு கடித எண்.2460/பண்1–1/2014–1, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, நாள் 5.3.2014
7) கலை பண்பாட்டுத் துறை ஆணையர்(பொ) அவர்களின் கடித ந.க.எண்.6782/ஆ1/2013, நாள்13.3.2014
8) கலை பண்பாட்டுத் துறை ஆணையர்(பொ) அவர்களின் கடித ந.க.எண்.6782/ஆ1/2013, நாள் 30.5.2014

********

**<u>ஆணை</u>**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 1991–92 பகுதி II திட்டத்தில் கலை பண்பாட்டு இயக்ககம் என்ற புதிய துறையை ஏற்படுத்தி ஆணையிடப்பட்டது. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு, ஜவகர் சிறுவரில்லம், சென்னை மற்றும் மதுரையிலுள்ள இசைப்பயிற்சி மையங்கள், சென்னை மற்றும் கும்பகோணத்திலுள்ள அரசு கலை– கைத்தொழில் கல்லூரிகள், மாமல்லபுரத்திலுள்ள சிற்பக்கலைக் கல்லூரி முதலியன கலை பண்பாட்டு இயக்ககத்தின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டன.

2) மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கலை பண்பாட்டு இயக்குநர் அலுவலகத்திற்காக ரூ.3000–4500 (தற்போது ரூ.15,600–39,100+ தர ஊதியம் 6,600) என்ற ஊதிய அளவீட்டில் ஒரு துணை இயக்குநர் பணியிடம் தோற்றுவித்து ஆணையிடப்பட்டது.

3) மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு நாட்டுப்புற கலைஞர்கள் நலவாரியத்தின் செயலாளர் பதவியை அரசு துணைச் செயலாளர் நிலையிலிருந்து ரூ.15600–39100 + தர ஊதியம் ரூ.6600 என்ற ஊதிய விகிதத்தில் கலை பண்பாட்டுத் துறையின் துணை இயக்குநர் நிலைக்கும் மற்றும் நலவாரிய நிர்வாக அலுவலர் பதவியை அரசு சார்புச் செயலாளர் நிலையிலிருந்து ரூ.15600–39100 + தர ஊதியம் ரூ.5400 என்ற ஊதிய விகிதத்தில் கலை பண்பாட்டுத் துறையின் மண்டல உதவி இயக்குநர் நிலைக்கும் மாற்றியமைத்து ஆணையிடப்பட்டது.

4) மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கலை பண்பாட்டுத் துறையில் தற்காலிகமாக தோற்றுவிக்கப்பட்ட ஒரு துணை இயக்குநர் பணியிடத்திற்கு கடைசியாக 1.1.2012 முதல் 31.12.2014 வரை 3 ஆண்டு காலத்திற்கு தொடர் நீட்டிப்பு வழங்கி ஆணையிடப்பட்டது.

5) மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், கலை பண்பாட்டுத் துறையின் கீழ் இயங்கும், திருச்சிராப்பள்ளி மண்டல கலை பண்பாட்டு மையத்தில் உள்ள உதவி இயக்குநர் பணியிடத்தை துணை இயக்குநர் (திட்டங்கள்) என மேனிலைப்படுத்தவும், அப்பணியிடம் திருச்சிராப்பள்ளியினை தலைமையிடமாகக் கொண்டு திட்டங்களை செயல்படுத்தவும், ஆணை பிறப்பிக்குமாறு அரசைக் கோரியிருந்தார். மேலே ஏழாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரிய செயலாளர் பதவியினை (துணை இயக்குநர் நிலை) திருச்சிராப்பள்ளிக்கும், திருச்சிராப்பள்ளியில் காலியாக உள்ள மண்டலக் கலை பண்பாட்டு மைய உதவி இயக்குநர் பணியிடத்தை கலை பண்பாட்டு இயக்ககத்திற்கு உதவி இயக்குநர் (திட்டங்கள்) என்று செயல்பட ஏதுவாக மாற்றம் செய்து ஆணை வழங்குமாறு கலை பண்பாட்டுத் துறை ஆணையர்(பொ) அவர்கள் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

6) கலை பண்பாட்டுத் துறை ஆணையர்(பொ) அவர்களின் கருத்துருவை அரசு கவனமாக பரிசீலித்து, அதனை ஏற்று, தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத்தின் துணை இயக்குநர் நிலையில் உள்ள வாரிய செயலாளர் பணியிடம் 01.03.2014 முதல் காலியாக இருந்து வருவதால், அப்பணியிடத்தை திருச்சிராப்பள்ளிக்கு 1.3.2014 முதல் மாற்றம் செய்து அரசு ஆணையிடுகிறது.

7) மேலும், திருச்சிராப்பள்ளியில் தற்போதுள்ள மண்டல கலை பண்பாட்டு மைய உதவி இயக்குநர் பணியிடத்தை தலைமையிடமான கலை பண்பாட்டு இயக்குநரகத்திற்கு மாற்றம் செய்தும் அரசு ஆணையிடுகிறது.

8) மேலே பத்தி 6 மற்றும் 7–ல் செய்துள்ள பணியிடங்கள் மாற்றம் செய்ததனைத் தொடர்ந்து, பின்வருவனவற்றை பின்பற்றுமாறு கலை பண்பாட்டுத் துறை ஆணையர்(பொ) கேட்டுக் கொள்ளப்படுகிறார் :–

i. மாற்றப்படும் நலவாரியத்தின் துணை இயக்குநர் நிலையில் உள்ள செயலாளர் பணியிடத்தில், நியமனம் செய்யப்படுபவருக்கு மதுரை, திருச்சி, திருநெல்வேலி மற்றும் தஞ்சாவூர் மண்டல கலை பண்பாட்டு மையப்பணிகள் வழங்கப்பட வேண்டும் ;

ii. தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியப் பணிகள் ஒருங்கிணைப்புடன் தொய்வின்றி செயல்பட கலை பண்பாட்டு இயக்குநரக இணை இயக்குநர் / உதவி இயக்குநர்களுக்கு பொறுப்புகள் வழங்கப்பட வேண்டும்;

iii. கலை பண்பாட்டு இயக்ககத்துக்கு மாற்றப்படும் மண்டல உதவி இயக்குநர் பணியிடம் நிரப்பப்பட்டு, அப்பணியிடத்திற்கு திட்டங்கள், விழாக்கள், கட்டுமானங்கள் மற்றும் பல்கலைக்கழகப் பணிகள், இயல் இசை நாடக மன்றம் போன்ற இதர அமைப்புகளின் திட்டப்பணிகள் குறித்த பொறுப்புகள் வழங்கப்பட வேண்டும்;

iv. மண்டல உதவி இயக்குநர் நிரப்பப்படும் வரை இப்பணிகள் ஏற்கெனவே இயக்குநரகத்தில் உள்ள உதவி இயக்குநரால் மேற்கொள்ளப்பட வேண்டும்

9) மேலே பத்தி 6–ல் மாற்றம் செய்யப்பட்ட தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத்தின் துணை இயக்குநர் நிலையில் வாரிய செயலாளர் பணியிடத்திற்கான செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

"2205 – 00 கலையும் பண்பாடும் – 102 கலை பண்பாட்டை வளர்த்தல் – 1
திட்டத்தில் சேராதது – AL தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம்
– 09 உதவித் தொகை – 01 நடப்புச் செலவுக்கான உதவித் தொகை"
(து.தொ.கு. 2205 00 102 AL 0912).

10) மேலே பத்தி 7–ல் மாற்றம் செய்யப்பட்ட மண்டல உதவி இயக்குநர் பணியிடத்திற்கான செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

"2205 – 00 கலையும் பண்பாடும் – 001 நிர்வாகமும் நெறிப்படுத்தலும் – 1
திட்டத்தில் சேராதது –AA கலை பண்பாட்டு இயக்ககம் – 01 சம்பளங்கள்"
(து.தொ.கு. 2205 00 001 AA 0105).

11) இவ்வரசாணை நிதித் துறையின் அலுவல் சாரா எண். 23994 /கல்வி–II/2014, நாள். 23.5.2014ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ரா. கண்ணன்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்
ஆணையர்(பொ),
கலை பண்பாட்டுத் துறை, சென்னை– 8.
உறுப்பினர் செயலாளர்,
தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம், சென்னை – 8
செயலாளர்,
தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம், சென்னை – 8
உதவி இயக்குநர், மண்டலக் கலை பண்பாட்டு மையம்,
காஞ்சிபுரம் / சேலம் / மதுரை / திருநெல்வேலி / தஞ்சாவூர் / திருச்சிராப்பள்ளி
(கலை பண்பாட்டுத் துறை ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–9. / மதுரை
மாவட்டக் கருவூல அலுவலர் / சார்கருவூல அலுவலர்,
காஞ்சிபுரம் / சேலம் / திருநெல்வேலி / தஞ்சாவூர் / திருச்சிராப்பள்ளி
(கலை பண்பாட்டுத் துறை ஆணையர் வழியாக)
முதன்மை மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–18.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–18 / 35.
உள்ளுரை தணிக்கை அலுவலர், முதன்மை மாநிலக் கணக்காய்வுத் தலைவர் (பொது மற்றும் சமூக பகுதி) அலுவலகம், சென்னை – 9.
நகல்:
முதுநிலை நேர்முக உதவியாளர், பள்ளிக்கல்வி அமைச்சர் அலுவலகம், சென்னை – 9
பணியாளர் (மற்றும்) நிர்வாக சீர்திருத்தத் (சி) துறை, சென்னை–9
நிதித் (கல்வி–II) துறை, சென்னை–9
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் தனிச்செயலர்,
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை–9.
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (பொது 2 / பண் 2)த் துறை, சென்னை–9.
தொழில்நுட்ப இயக்குநர், தேசிய தகவல் மையம், சென்னை – 9
அரசாணை (நிலை) எண்.243, தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறை, நாள் 23.12.1991–க்கு ஒரு படி
அரசாணை (நிலை) எண்.115, தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறை, நாள் 6.5.1997–க்கு ஒரு படி
நாள் 6.5.1997–க்கு ஒரு படி
அரசாணை (நிலை) எண்.53, சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை, நாள் 28.2.2011–க்கு ஒரு படி
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.